பெயர்:-..... (புள்ளி = ...)

அருள் மற்ஸ் அக்கடமி

இல.41,இராஜேந்திரா வீதி, (டேவிட் வீதி லேன்), யாழ்ப்பாணம்.

முதலாம் தவணைப் பரீட்சை

தமிழ்மொழியும் இலக்கியமும்

தரம் - 10

2.30 மணித்தியாலம்

இரா.ரமணன்

பகுதி - 1

அ) மிகச்சரியான விடையின் கீழ் கோடிடுக.

01) தன் தேன் நுகரா மண்டுகம். இங்கு மண்டுகம் என்பது
1. வண்டுகள் 2. மீன்கள் 3. தவளைகள் 4. தாமரைகள்

02) காந்தி அகிம்சை வழியில் போராடினார். இதில் அகிம்சை என்பதன் எதிர்க்கருத்துச் சொல்
1. இச்சை 2. பகிஷ்கரிப்பு 3. துறவு 4. இம்சை

03) பாணன் யாழ் வாசித்தான். பாணன் என்பதன் எதிர்ப்பாற் சொல்
1. செவிலி 2. பாதனி 3. விறலி 4. கூத்தி

04) மாவுக்கு வடு போல, பலாவுக்கு
1. கச்சல் 2. மூசு 3. சுளை 4. குரும்பை

05) ''இளங்கன்று பயமறியாது'' என்னும் பழமொழி உணர்த்தும் கருத்து
1. உத்தம நட்பு 2. போர் செய்யத்துணிதல்
3. வாலிபத் துணிவு 4. மிடுக்கு கொள்ளல்

06) விவசாய சமூகத்தினர் கோல் என அழைப்பது
1. சாணம் 2. வைக்கோல் 3. சுளகு 4. எருது

07) மாலை அல்லது இரவில் கூடும் சந்தை
1. அல்லங்காடி 2. நாளங்காடி 3. பகல்சந்தை 4. இரவுச்சந்தை

08) கொஞ்சிக்குலாவி என்பது
1. மரபுத்தொடர் 2. உவமைத்தொடர்
3. இணைமொழித்தொடர் 4. அடுக்கிடுக்குத்தொடர்

09) அறிவழகு வந்தான் என்பது
1. வினைத்தொகை 2. உம்மைத்தொகை
3. அன்மொழித்தொகை 4. உவமைத்தொகை

10) காற்று வீசியதால் விளக்கு அணைந்தது. இவ்வாக்கியத்தின் எழுவாய்
1. காற்று 2. விளக்கு 3. வீசியமை 4. அணைந்தது

11) நீர் வந்தால் நான் பணம்
1. தருவேன் 2. தரேன் 3. தந்திருப்பேன் 4. தரவில்லை

12) விவசாய சமூகத்தினர் குல்லம் என்ற சொல்லால் குறிப்பிடுவது
1. சாணம் 2. சுளகு 3. சூடு மிதிக்கும் எதுருகள் 4. களத்தடி

13) விசாரணைக் குழு சமர்ப்பித்த ..... அரசு ஏற்றுக் கொண்டது
1. அறிக்கையை 2. வேண்டுகோளை 3. சிபார்சை 4. விதப்புரையை

www.ikedu.lk

zoom Online
வகுப்புக்கள்

LEARN EASY

- KNOWLEDGE IS POWER -

www.learneasy.lk || www.lkedu.lk

76667-4945

பாலர் வகுப்பு முதல் A/L வரை



" தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூல வகுப்புக்கள் "

PRIMARY

- தமிழ்
- நுண்ணறிவு
- கணிதம்
- பேச்சு சிங்களம்
- சுற்றாடல்
- பேச்சு ஆங்கிலம்





SECONDARY

- ICT
- MATHS
- ENGLISH
- TAMIL
- HISTORY
- SCIENCE

தனித்துவமான
புலமைப்பரிசில் பரீட்சை
வகுப்புக்கள் தரம் I தொடக்கம்
5 வரை நடைபெறுகின்றன

76667-4945

14) கூட்டத்திற்குச் சமூகமளிக்காத உறுப்பினர்களிடம் தலைவர் ..... கோரினார்

1. நியாயம் 2. வேண்டுகோள் 3. விளக்கம் 4. ஆசி

15) யானையின் ஆண் களிறு போல. நண்டின் ஆண்

1. கடுவன் 2. குண்டு 3. அலவன் 4. போத்து

16) பின்வருவனவற்றுள் ஒல்லாந்தமொழிச் சொல்லாக அமைவது

1. கோப்பை 2. அட்சரம் 3. முருங்கை 4. தோம்பு

17) "இக்கரை மாட்டிற்கு அக்கரை பச்சை" என்ற பழமொழி உணர்த்தும் பொருள்

1. முக்கியத்துவம் 2. வாலிபத்துணிவு
3. திருப்தியற்ற மனம் 4. உத்தம நட்பு

18) மன்றத் தலைவன் செய்த தில்லுமுல்லுகள் அம்பலமாகின. இங்கு தில்லுமுல்லு என்பது

1. அடுக்குமொழி 2. இரட்டைக்கிளவி
3. அடுக்கிடுக்குமொழி 4. இணைமொழி

19) பானை உடைத்தவனுக்கு தண்டனை கிடைத்தது. இங்கு உடைத்தவனுக்கு என்பது

1. பெயர்ச்சொல் 2. வினையாலணையும் பெயர்
3. இடைச்சொல் 4. செயற்படுபொருள்

20) குளொனிங் (Cloning) என்ற சொல்லின் தமிழ்க் கலைச் சொல் வடிவம்

1. மரபணுச் செயன்முறை 2. கருந்துளை
3. பச்சை வீட்டு விளைவு 4. படியாக்கம்

21) "சீராரும் வதனம் எனத் திகழ் பரதகண்டம்" இதில் வதனம் என்பதன் ஒத்த கருத்துச் சொல்

1. முகம் 2. நெற்றி 3. நிலவு 4. தலை

22) தமிழ் மக்கள் நல்ல நாகரிகங்களைப் பின்பற்றினர். இங்கு நாகரிகம் என்பதன் எதிர்கருத்துச் சொல்

1. நாகரீகம் 2. அநாகரீகம் 3. பண்பாடு 4. அநாகரிகம்

23) விளையாட்டுப்போட்டியில் வெற்றி பெற்ற வீரனுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டன. இங்கு வீரன் என்ற சொல்லின் எதிர்ப்பாற்சொல்

1. கெட்டிக்காரன் 2. கெட்டிக்காரி 3. வீராங்கனை 4. திறமைசாலி

24) மா, பலா, வாழை என்னும் மூன்றும் ..... எனப்படும்

1. முக்கனிகள் 2. முற்கனிகள் 3. தீங்கனிகள் 4. நற்கனிகள்

25) மாவின் இளையது வடு என்பது போல, வாழையின் இளையது ..... எனப்படும்.

1. கச்சல் 2. பிஞ்சு 3. மூசு 4. பொத்தி

26) சிங்கம் கர்ச்சிக்கும் என்பது போல, மாடு

1. கதறும் 2. கத்தும் 3. உறுமும் 4. முக்காரம்போடும்

27) கண்வளர்தல் என்ற மரபுத் தொடரின் பொருள்

1. நித்திரை செய்தல் 2. ஒருவரை ஒருவர் விரும்புதல்
3. இரக்கங்காட்டுதல் 4. கண் மூடுதல்

28) பின்வருவனவற்றுள் இரு திணைப் பொதுப்பெயராக அமைவது

1. நீதிபதி 2. ஆசிரியர் 3. மாணவர் 4. தாய்

29) மென்றொடர்க் குற்றியலுகரத்திற்கு உதாரணமாக அமைவது

1. பஞ்சு 2. கொக்கு 3. மார்பு 4. ஆடு

30) பின்வருவனவற்றுள் இயல்புப் புணர்ச்சியாக அமைவது

1. மரங்கள் 2. கடலலை 3. மரவேர் 4. வாழைப்பழம்

(30 புள்ளிகள்)

www.keou.lk

பகுதி II

ஆ) பின்வரும் வினாக்களுக்கு விடை தருக

1. திரிகடுகங்கள் எவை?
2. பிறிற்றோவின் தொழில் யாது?
3. ''தண்டா மரையினுடன் பிறந்தும் தண்டேன்'' எனும் பாடலடியை சந்தி பிரித்து எதுக?
4. இலங்கை சட்டசபையை பிரதிநிதித்துவப்படுத்த போட்டியிட்ட இருவரும் யாவர்?
5. நாற்படைகளும் எவை?
6. தமிழ் நெடுங்கணக்கை அட்டவணைப்படுத்துக?
7. கட்டுரை ஒன்றின் பிரதான உறுப்புகள் எவை?
8. ''மச்சாள்'' என்னும் சிறுகதையை எழுதியவர் யார்?
9. ''நாவலர் எழுந்தார்'' என்ற கட்டுரையின் ஆசிரியர் யார்?
10. நாவலடியாரை தெகுப்பித்தவர் யார்?

(20 புள்ளிகள்)

இ) பின்வருவனவற்றுள் ஒன்றைத் தெரிவு செய்து 200 சொற்களுக்கு குறையாமல் கட்டுரை எழுதுக. பொருத்தமான தலையங்கமும் எழுதுக.

1. நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக அன்ரன் தனது படிப்பை பாதியிலேயே கைவிட்டு கடல்வழிப் பயணமாக அவுஸ்ரெலியாவுக்கு சென்றான். ஆனால் அவன் நினைத்தது வேறு. நடந்தது வேறு. இதனை கருப்பொருளாக வைத்து பொருத்தமான சிறுகதை.

2. தற்கால நாகரிக யுகத்தில் நாட்டார் இலக்கியங்கள் அழிந்து போவதற்கான வாய்ப்புக்கள் அதிகமாகும். அவ் வகையில் நாட்டார் இலக்கியங்களைப் பேணுதல் அவசியமாகும். என்ற கருத்திற்குப் பொருத்தமாக இருவருக்கிடையில் நடைபெறும் உரையாடல்.

3. இன்றைய உலகில் பெருகிவரும் தொழில்நுட்ட சாதனங்கள் மூலமாக தொடர்புச் சாதனங்களின் எண்ணிக்கை அதிகரித்து வந்துள்ளன. இவற்றின் வளர்ச்சி சின்னத்திரை உலகிலும் தாக்கத்தை ஏற்படுத்தி உள்ளன. அவ்வகையில் இன்று ஒளிபரப்பப்படும் தொலைக்காட்சி, நாடகங்களால் சமூகத்தில் ஏற்பட்டுள்ள அனுகூலங்கள், பிரதிகூலங்கள் பற்றி விளக்கக் கட்டுரை ஒன்று எழுதுக.

4. உலகில் மக்கள் பல மொழிகளைப் பேசுகின்றனர். மக்களால் சில மொழிகள் பழங்காலம் முதல் இன்றுவரை பேசப்பட்டு வருகின்றன. அவற்றைத் தொன்மையான மொழிகள் எனக்கூறுவர். மிகத்தொன்மையான மொழிகளுள் ஒன்று தமிழ்மொழி. அத்தமிழ் மொழியே இனிய மொழி என்னும் கருத்தை விலியுறுத்தி ஒரு மேடைப் பேச்சு.

(15 புள்ளிகள்)

ஈ) இன்று புகைத்தல் இளைஞர்களிடையே நாகரிகமாகப் பரவி வருகின்றது. எனினும் புகைத்தலினால் பல எதிர்விளைவுகள் எற்படுவதோடு மரணம் கூட சம்பவிக்கலாம் என்பதை சுட்டிக்காட்டி விடுதியில் தங்கிக் அகல்வி கற்கும் உமது நண்பணுக்கு 75 சொற்களில் ஒரு கடிதம் எழுதுக. **(10 புள்ளிகள்)**

www.ikeou.lk













Learn Easy Books

அனைத்து தரங்களுக்குமான பயிற்சி புத்தகங்கள்,
செயலட்டைகள், தவணை பரீட்சை மாதிரிகள் போன்றவற்றை
உங்கள் முகவரியில் பெற்றுக்கொள்ள அழையுங்கள்

+94 767573 559

FB Page - https://www.facebook.com/lebslk

இணையத்தில் ஒரு கல்வி புரட்சி

தரம் 1 தொடக்கம் A/L வரையான
அனைத்து தரத்தினருக்கும் அனைத்துப் பாடங்களையும்

www.lkedu.lk

இணையத்தில்
இலவசமாக கற்றுக்கொள்ளலாம்

FB Page - https://www.facebook.com/learneasylk

FB Group - https://www.facebook.com/groups/lkedu

உ) கீழ்காணும் பந்திகளை வாசித்து அதன் சாரம்சத்தை 15 - 20 சொற்களில் சுருக்கி எழுதுக.

கல்வி என்பது ஒருவனுடைய மூளையில் பல விஷயங்களைத் திணித்து விடுவதன்று. அவ்விதம் திணிக்கப்படும் விஷயங்கள் இங்கே வாழ்நாள் முழுவதும் செரியாமல் உபத்திரவித்துக் கொண்டிருக்கின்றன. அதனால் என்ன பயன், கற்கும் விஷயங்கள் நன்கு ஜீரணமாக வேண்டும். அவை உயிர் ஊட்டுவனவாய், மனிதத்தன்மை தருவனவாய், ஒழுக்கம் அமைப்பனவாய் இருக்க வேண்டும். நீங்கள் ஐந்தே ஐந்து கருத்துக்களை ஜீரணித்துக் கொண்டு அவற்றை உங்கள் வாழ்க்கையிலும் நடத்தையிலும் ஊடுருவி நிற்கும்படி செய்வீர்களானால் ஒரு பெரிய புத்தகசாலை முழுவதையும் மனப்பாடலம் செய்திருப்பவனை விடப் பெரிய கல்விமானாவீர்கள்

(05 புள்ளிகள்)

ஊ) 1) ‘‘கணக்காய ரில்லாத பிணக்கறுக்கு
மூத்தோரை யில்லா வவைக்களனும் - பாத்துண்ணுந்
தன்மையிலாள ரயலிருப்பு மிம்மூன்று
நன்மை பயத்த லில”

அ) இப்பாடலை பாடியவர் அயார்?
ஆ) இப்பாடல் இடம்பெறும் நூல் எது?
இ) ஒருவருக்கு நன்மை பயக்காத மூன்று விடயங்களும் எவை?

2) ‘‘பொழிந்த நெய் யாகுதி வாய்வழி பொங்கி
எழுந்த கொழுங்கன லென்ன எழுந்தார்
மாக மடங்கலும் மால் விடையும் பொன்
னுடகமும் நாண நடந்தார்.”

அ) இப்பாடல் இடம்பெறும் காவியம் எது?
ஆ) கம்பனால் குறிப்பிடப்படுபவர் யார்?
இ) பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளையால் குறிப்பிடப்படுபவர் யர்?

(10 புள்ளிகள்)

எ) எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடை தருக.

1) நாவலர் எழுந்தார் என்ற கட்டுரையை அடிப்படையக கொண்டு
அ) நாவலரின் குணப்பண்புகள்
ஆ) பிறிற்றோவின் நேர்மையற்ற செயல்
இ) நாவலரின் மனநிலை

(10 புள்ளிகள்)

2) நீதிப்பாடலில் உள்ள நீதிக்கருத்துக்களை தொகுத்து கூறுக.

3) ‘‘பிள்ளைக்காதலில் பாரதியார் மனித விழுமிய பண்புகளை தனது கவித்துவத்தால் வெளிக்காட்டியுள்ளார், விளக்குக.

(10 புள்ளிகள்)

www.ikedu.lk